சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்.
முன்னிலை.- திருமதி. T.மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,
சார்பு நீதிபதி, ஓமலூர்.

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.1/2025
in
இ.ம.எண்.5/2024
in
அசல் வழக்கு எண்.685/2018

1. செல்லம்மாள்
2. முத்துமாணிக்கம் . . . எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள்

// எதிராக //

ராஜம்மாள் .... எதிர்மனுதாரர்/வாதி

மனோகரன் . . . மனுதாரர்/உத்தேச 2 ம் எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி

இந்த மனுவானது என் முன்னர் 18.07.2025 ஆம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.S.சுந்தரராஜன், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.பிரபு, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு R.தீனதயாளன் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதுரைகள் கேட்டும், மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரரரை I.A.No.5/2024 மனுவில் 2 ம் எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 சி.பி.சியின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஆகும்.

**1.** <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு உறுதிக் கூற்றின் சுருக்கம்</u>

அ) மனுதாரர் இ.ம.எண்.5/2024 ல் உத்தேச எதிர்மனுதாரர் மற்றும் தாவாவில் 4ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்/வாதி ராஜம்மாள் மேற்படி அசல் வழக்கை 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை, பாகப் பிரிவினை மற்றும் நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார். கடந்த 07.12.2024 ம் தேதிய இந்நீதிமன்ற A டைரியில் பி.சா.2 ஆஜராகி இருந்தார் என்றும், குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டு, 3, 4 பிரதிவாதிகள் சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்றும், 1, 2 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட கட்டளை 9 விதி 7, பிரிவு 151 ன் கீழான மனுவை சரிபார்க்க மற்றும் அழைக்க வாய்தா 12.12.2024 என்றும் எழுதப்பட்டு இருந்தது. பின்னிட்டு கடந்த 12.12.2024 ஆம் தேதி மேற்படி மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது.

ஆ) மேற்படி ஒருதலை பட்ச மனுவில் மேற்படி மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்படி வழக்கானது 2013 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட போது, 1, 2 பிரதிவாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலம் ஆஜரானார்கள். ஆனால் 1,2 பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் பதிலுரை தாக்கல் செய்யாததால் 11.04.2014 ஆம் தேதி ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக மேற்படி வழக்கை தாக்கல் செய்யாததற்கான காரணமும் பிரதிவாதிகளுடைய மனுவில் குறிப்பிடவில்லை. 1, 2 பிரதிவாதிகள் வாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு பதிலுரை தாக்கல் செய்யாமல் வழக்கை இழுத்தடித்து விட்டு தற்போது ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

இ) வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்த போது அவர் தனது பதிலாக "தான செட்டில்மெண்ட் ஆவணம் 3 ஆம் பிரதிவாதி பெயரில் இருப்பதை பொறுத்து எனது மாமியார் 1ம் பிரதிவாதி எனது மாமனார் இறந்த 2 ஆண்டுகள் கழித்து தான் சொன்னார். இந்த வழக்கை எனது மாமியார் சொல்லிதான் எனது மனைவி தாக்கல் செய்தார்" என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்தே வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாளிகள் என்பது தெரிய வரும். எனவே இ.ம.எண்.5/2024 ல் இந்த மனுதாரரை சேர்க்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். எனவே,

இ.ம.எண். I.A.No.5/2024 மனுவில் மனுதாரரை 2ம் எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** <u>**1, 2** எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

அ) இம்மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது. சட்டத்திற்கும் நியாயத்திற்கும் எதிரானது. இம்மனுவில் இந்த எதிர்மனுதாரர்கள் ஒப்புக் கொண்டுள்ள சங்கதியை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர்/உத்தேச 2ம் எதிர்மனுதாரர்/4ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள 4, 5, 7 பாராவில் கூறியுள்ளது பொய்யாகும். இந்த மனுவானது சட்டப்படி ஏற்க கூடியது அல்ல. இவ்வழக்கின் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 5, 6 பிரதிவாதிகள் ஒரு கந்தசாமி என்பவரின் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி கந்தசாமிக்கு 1ம் பிரதிவாதியான செல்லம்மாள் என்ற மனைவி மூலம் வாதி ராஜம்மாள், 2ம் பிரதிவாதி முத்துமாணிக்கம், 3ம் பிரதிவாதி சம்பூரணம் மற்றும் ஒரு வசந்தி ஆகியோர்கள் பிறந்தார்கள். மேற்படி 3ம் பிரதிவாதி சம்பூரணம் என்பவரின் கணவர் தான் இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி மனோகரன் ஆவார். 5, 6 பிரதிவாதிகளின் தாயார் வசந்தி என்பவர் எங்கு உள்ளார் என்று பல வருடங்களாக தெரியவில்லை. இதனால் 1ம் பிரதிவாதியின் கணவர் கந்தசாமி மகள்களுக்கு என்று ஒரு சொத்தும் ஒரே மகனான முத்துமாணிக்கம் என்பவருக்கு என்று ஒரு சொத்தும் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து மனோகரின் மனைவி சம்பூரணம் என்பவர் பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி அதில் இரண்டு ஏக்கர் நிலத்தை எழுதி கொடுத்து மேற்படி இரண்டு ஏக்கர் நிலத்தை மூன்று பெண்களும் பிரித்து கொள்ள வேண்டும் என எழுதிக் கொடுத்துவிட்டார்.

ஆ) அவருக்கு மீதமுள்ள பு.ஏக்3.10 செண்ட் நிலத்தை கந்தசாமி என்பவர் இறந்த பின்னர் ஒரு பாகப் பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி அதனை ஆவண எண் 6667/2011 என்ற எண்ணில் 2ம் பிரதிவாதி முத்துமாணிக்கம் என்பவருக்கு ஒதுக்கி கொடுக்கப்பட்டு விட்டது. இந்த மனுதாரர் மற்றும் அவரது மனைவி சம்பூரணம் ஆகியோர்கள் 1ம் பிரதிவாதியின் கணவர் கந்தசாமி என்பவரிடம் உறுதி அளித்த படி வாதிக்கு செட்டில்மெண்ட் சொத்தில் பாகம் கொடுக்காத காரணத்தால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இ) வாதி தாக்கல் செய்திருந்த அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வைத்து ஆஜராகி இருந்த போது அவருக்கு ஏற்பட்ட வயது பிரச்சினையின் காரணமாக அவரால் முறையாக ஆஜராகி அவர் தரப்பில் வழக்கு எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை . அதன் பின்னர் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலை பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த ஒருதலை பட்ச உத்திரவை ரத்து செய்ய கோரும் மனுவில் இந்த மனுதாரர் அவசியம் இல்லாத தரப்பினர் ஆவார். அவசியம் இல்லாத தரப்பினரை இந்த மனுவில் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம், ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. இம் மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால்,

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?இல்லையா? என்பதேயாகும்.

**6.** பிரச்சினைக்கான தீர்வு

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு மற்றும் எதிருரையின் சங்கதிகளையே வாதமாக வைக்கப்பட்டது. இம்மனுவானது மனுதாரரை இ.ம.எண்.5/2024 மனுவில் 2ம் எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இ.ம.எண் 5/2024 மனுவானது 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும். இந்த மனு தாக்கல் செய்வதற்கு காரணமாக உத்தேச தரப்பினர்/4ம் பிரதிவாதி கூறியுள்ளபடி வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாளிகள் என்பதே ஆகும். இந்நீதிமன்றம் மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்த போது இ.ம.எண்.5/2024க்கு வாதி/எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

7. மனுதாரர் /உத்தேச தரப்பினர் சார்பாக அசல் வழக்கில் எதிரிடை கோரிக்கை தாக்கல் செய்யவில்லை. எதிரிடை கோரிக்கை மனு நிலுவையில் இருந்தால் மட்டுமே மனுதாரர்/உத்தேச தரப்பினர்/4ம் பிரதிவாதியை இந்த வழக்கில் வாதியாக கருத

இயலும். மேலும் இந்த மனுதாரர்/உத்தேச தரப்பினர்/4ம் பிரதிவாதி இந்த மனுவில் தேவையான தரப்பினரோ அல்லது அவசியமான தரப்பினரோ அல்ல. இ.ம.எண்.5/2024 மனுவை அனுமதிப்பதால் 4ம் பிரதிவாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் ஒரு வழக்கில் யாருக்கு எதிராக பரிகாரம் கோரப்படுகிறதோ அவர்கள் மட்டுமே தரப்பினராக சேர்க்க இயலும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் 1,2 பிரதிவாதிகள் மீது பிறப்பித்த ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்ய ஆட்சேபனை வாதியிடம் தான் கேட்க வேண்டும் . இந்த மனுவை அனுமதிப்பதால் மனுதாரர்/உத்தேச தரப்பினர்/4ம் பிரதிவாதிக்கு எந்த தீங்கும் ஏற்பட போவதில்லை. மேலும், இ.ம.எண்.5/2024 மனுவில் தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமா என்பது தீர்மானிக்கப்படும். மேலும் மேற்படி மனுவில் வாதி தனது எதிருரையை தாக்கல் செய்திருக்கிறார். எனவே இ.ம.எண்.5/2024ல் முடிவை தீர்மானிக்க இந்த மனுதாரர்/உத்தேச தரப்பினர்/4ம் பிரதிவாதி அவசியமில்லாத மற்றும் தேவையில்லாத தரப்பினர் என்பதால் இந்த மனுவிற்கு முகாந்திரம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானித்து இம்மனு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக,

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ஆம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./- T. மாலதி,
சார்பு நீதிபதி
ஓமலூர்

பிற்சேர்க்கை:
இரு தரப்பு சாட்சிகள்/சான்றாவணங்கள்: இல்லை.

ஒம்./- T. மாலதி,
சார்பு நீதிபதி
ஓமலூர்